Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 106/2024

Deposition of witness for Prosecution – P.W.1 Date : 25.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | ஆனந்தன் | Village : | செல்லனூர் |
| Father's Name : | ஸ்ரீ ரங்கன் | Taluk : | அன்னூர் |
| Age : | 46 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2025 **(Accused present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது செல்லனூாில் குடியிருந்து கூலி வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 2024ம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 7 மணியளவில் என் மகன் சாலமன் ராஜா அன்னூர் தாலுக்கா அலுவலகம் முன்பு சாலையை கடக்க நின்று கொண்டிருந்தவர் மீது வாழைக்காய் லோடு ஏற்றி வந்த ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக என் பக்கத்து வீட்டில் புதிதாக குடிவந்த நபர் ஒருவர் வந்து தகவல் சொன்னார். அப்போது நான் வீட்டில் இருந்தேன். உடனே நான் சம்பவயிடம் வந்து பார்த்தபோது அதற்கு முன்பே என் மகனே அன்னூர் அரசு மருந்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டனர். நான் அங்கு சென்று பார்த்த போதே என் மகன் உயிருடன் இல்லை. இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அதில் காட்டப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான்.(**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என் மகன் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்த்தது இல்லை. அவர் யார் என்று எனக்கு தெரியாது, அவர் பெயர் தெரியாது, விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது கூறிய சாட்சியத்தையே தான் போலீசார் விசாரித்தபோது கூறினேன் என்றால் ஆமாம்.

Sd/- V.Monika

District Munsif cum Judicial Magistrate,

Annur.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.